## தொல்பொருளியல் பட்டப்பின் படிப்பு நிறுவகம் - 2010

1. **நிதிக் கூற்றுக்கள்**

---------------------------

1.1 **அபிப்பிராயம்**

-------------------------

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய, தொல்பொருளியல் பட்டப்பின் படிப்பு நிறுவகம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி தொல்பொருளியல் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு மற்றும் காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்ராயப்படுகின்றேன்.

1.2 **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

-----------------------------------------------------------------

1.2.1 **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

--------------------------------------------

மூலதன முற்பணங்களாக செலுத்தப்பட்ட ரூபா 207,241 தொகையில் செலவிடப்படாத தொகை செலவிடப்படாத மூலதனச் செலவினங்கள் என கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் முழுமையான முற்பணத் தொகையும் செலவிடப்பட்ட மூலதனச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஏனைய பெறவேண்டிய கணக்குகளில் உள்ள ரூபா 123,088 மீதியொன்று 06 வருடங்களிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏனைய பொறுப்புக்களின் கீழ் இரத்துச் செய்யப்பட்ட காசோலைகளாக காண்பிக்கப்பட்டுள்ள மீதியில் உள்ள ரூபா 16,815 காசோலைகளை இரத்துச் செய்து 05 வருடங்களிற்கும் மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 214,022 ஆன மூலதன முற்பணங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்க்கப்படாதிருந்ததுடன் அம் முற்பணத்தில் 03 வருடங்களிற்கும் மேல் பழமைவாய்ந்த ரூபா 6,713 முற்பண மீதியொன்றும் காணப்பட்டது.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

---

மீளாய்வாண்டில் செயற்பாட்டிலிருந்த 09 செயற்திட்டங்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்கி ஒழுகாமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாண கோவை | |
| நி.பி. 396 | வழங்கப்பட்டிருந்த போதிலும் 06 மாதங்களிற்கும் மேலாக கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத ரூபா 13,088 ஆன 17 காசோலைகள் தொடர்பில் வேண்டப்பட்டவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 09 ஆம் இலக்க 2006 மார்ச் 01 ஆந் திகதிய கொள்வனவு வழிகாட்டல் கைநூலின் 04 ஆம் அத்தியாயம் | போக்குவரத்து, பாதுகாப்பு, சுத்திகரிப்பு மற்றும் ஏனைய ஒப்பந்தச் சேவைகளிற்காக மீளாய்வாண்டில் முறையே ரூபா 737,869, ரூபா 639,078, ரூபா 279,666 மற்றும் ரூபா 33,398 ஆன தொகைகள் செலவிடப்பட்டிருந்த போதிலும் அச்சேவைகள் கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

1.2.5 **போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்**

---

பொது முயற்சிகள் திணைக்களத்தின் 1994 ஜுன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாக மீளாய்வாண்டின் போது நிறுவகத்தின் பதவியினருக்கு மொழித் தேர்ச்சிப் படியாக ரூபா 56,440 செலுத்தப்பட்டிருந்தது.

2. **நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

---

2.1 **நிதிசார் மீளாய்வு**

---

2.1.1 **நிதிசார் விளைவுகள்**

---

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிறுவன செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவுகள் மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுக்க முன்னர் ரூபா 30,801,301 பற்றாக்குறையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டுக்கான பற்றாக்குறை ரூபா 29,360,818 ஆகும். மீண்டெழும் செலவினங்களுக்கு அரசாங்கத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா. 33,639,960 மானியம் காரணமாக மீளாய்வாண்டிற்காக ரூபா 2,838,659 மிகையொன்று ஏற்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டில் மீண்டெழும் செலவினங்களுக்கு அரசாங்கத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா 28,636,000 மானியம் காரணமாக அவ்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 724,818 வரை குறைவடைந்திருந்தது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

### 2.2.1 கல்விசார் செயலாற்றுகை

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது 03 பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறிகளும் இரண்டு கலை முதுமானி பாடநெறிகளும் விஞ்ஞானமுதுமானி, உளவியல் முதுமானி மற்றும் கலாநிதி பாடநெறி ஒன்றும் நடாத்துவதற்கு திட்மிடப்பட்டிருந்தது. அதற்கமைய 03 பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறிகளிற்காக 56 மாணவர்களும் விஞ்ஞானமுதுமானிப் பாடநெறிக்காக 47 மாணவர்களும் 02 உளவியல் முதுமானி மற்றும் கலாநிதி பாடநெறிகளிற்காக முறையே 03 மற்றும் 06 மாணவர்களும் பதிவுசெய்திருந்தனர்.

(ஆ) முன்னைய ஆண்டில் நடாத்தப்பட்ட கலைமுதுமானி (தொல்பொருளியல்) மற்றும் மரபுரிமை கலைமுதுமானி (மரபுரிமை) பாடநெறிகளிற்காக மீளாய்வாண்டில் மாணவர்கள் பதிவுசெய்து கொண்டிருக்கவில்லை.

(இ) 2010 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட விஞ்ஞானமுதுமானி, கலைமுதுமானி, நூதசாலை விஞ்ஞானம் தொடர்பிலான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா மற்றும் மரபுரிமைக் கற்கைகள் தொடர்பிலான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறிகளின் பரீட்சைப் பெறுபேறுகள் இதுவரை வெளியிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 பதவியணி

------------------

பதவியணியின் சகல உத்தியோகத்தருக்கும் ஊழியர்களிற்கும் கடமைப்பட்டியல் ஒப்படைக்கப்பட வேண்யிருந்த போதிலும் 32 பேர்களைக் கொண்ட நிறுவகத்தின் மொத்தப் பதவியணியில் 08 பேர்களிற்கு கடமைகள் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 **தனியார் பாதுகாப்புச் சேவை**

**-----------------------------------------**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சேவை உடன்படிக்கையின் படி 60 வயதினைத் தாண்டிய ஊழியர்களை பாதுகாப்புச் சேவையில் ஈடுபடுத்த முடியாத போதிலும் 60 வயதினைத் தாண்டிய ஊழியர் ஒருவர் பாதுகாப்புச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.

(ஆ) நிறுவக வளவின் அமைவிடம், நிலத்தின் விஸ்தீரணம் மற்றும் தேவைப்பாட்டினைக் கருத்திற்கொள்ளாமல் நாளாந்தம் எட்டு மணிநேர மூவேளை பாதுகாப்புச் சேவைக்கு மூன்று பாதுகாப்புச்சேவை ஊழியர் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் இரவுநேர பாதுகாப்புச்சேவை நிறுவக உத்தியோகத்தர் ஒருவரினால் மேற்பார்வை செய்யப்பட்டிருக்கவில்லை.

2.2.4 **இருப்புக் கட்டுப்பாடு**

**-------------------------------**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருடாந்த இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் படி 164 நூலகப் புத்தகங்களினதும் 139 சஞ்சிகைகளினதும் குறைவு அவதானிக்கப்பட்டது.

(ஆ) இருப்புச் சீராக்கல் கணக்கின் ரூபா 41,505 மீதிக்கு 03 வருடங்களிற்கும் மேற்பட்ட காலம் சென்றிருந்த போதிலும் தீப்பனவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) அச்சிடப்பட்டு 10 வருடங்களிற்கும் மேல் பழமைவாய்ந்த ரூபா 250,508 பெறுமதியான அசைவுறாத இருப்பொன்று பிரசுரங்களில் காணப்பட்டன.

## 2.2.5 ஒப்பந்த நிர்வாகம்

-----------------------------

நூலகத்தினையும் விரிவுரை மண்டபத்தினையும் நிர்மாணிப்பதற்காக தயாரிக்கப்பட்டிருந்த ரூபா 36 மில்லியன் பொறியியலாளர் மதிப்பீடு 2005 ஓகஸ்ட் 03 ஆந் திகதி அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் பெறுமதிசேர் வரி நீங்கலான ரூபா 33,804,507 விலைமனுவிற்கு 2007 ஜனவரி 19 ஆந் திகதி ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் படி 2007 நொவம்பர் 27 ஆந் திகதி வேலைகளை முடிவுறுத்துவதற்கு தீர்மானமாகியிருந்த போதிலும் 18 மாத காலத்தினுள் நான்கு தடவைகள் கால நீடிப்புச் செய்யப்பட்டிருந்தமையால் காலவேறுபாடு மற்றும் விலை வேறுபாடுகள் காரணமாக மதிப்பீட்டினைக் காட்டிலும் ரூபா 4,743,414 இனால் கிரயம் அதிகரித்திருந்தது.

இக் கட்டிடத்தினை வெற்று நிலத்தில் நிர்மாணிப்பதற்கு ஆரம்பத்தில் திட்டமிட்டிருந்த போதிலும் பின்னர் மரஞ் செடிகள் கொண்ட பகுதியில் நிர்மாணித்தமையால் மரங்களின் வேர்கள் மற்றும் கிளைகளின் தாக்கம் காரணமாக கட்டிடத்தில் வெடிப்புக்கள் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் இக் கட்டிடத்தினை நிர்மாணிப்பதில் காணப்பட்ட குறைபாடுகள் ஒப்பந்தக்காரரினால் நிவர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் அக் குறைபாடுகள் தொடர்பில் ரூபா 82,141 இனை பற்றுச்சீட்டிலிருந்து கழித்த பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் கட்டிடக் குறைபாடுகள் இதுவரை நிவர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## நிதிகளின் குறைப்பயன்பாடு

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூலதன மற்றும் மீண்டெழும் செயற்பாடுகளிற்காக பேணிவரப்படுகின்ற இரண்டு வங்கி நடைமுறைக் கணக்குகளில் மீளாய்வாண்டின் மாத இறுதியிலான குறைந்தபட்ச மீதிகள் முறையே ரூபா 2,808,106 மற்றும் ரூபா 4,019,133 ஆனதுடன் மீளாய்வாண்டில் அக்கணக்குகளின் மீதான சராசரி மீதிகள் ரூபா 5,376,703 மற்றும் ரூபா 5,946,359 ஆனமையால் நிதிகளைப் பயன்படுத்தாது நடைமுறைக் கணக்குகளில் வைத்துக் கொண்டிருந்தமையால் அந் நிதிகளை முதலீடு செய்வதனால் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்த நலன்கள் இழப்பாகியிருந்தன.

(ஆ) ரூபா 153,508 ஆன தொகை மூன்று வங்கி நடைமுறைக் கணக்குகளில் 05 வருடங்களிற்கும் மேற்பட்ட காலமாக வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் தொடக்கத்தில் மூலதனக் கணக்கில் ரூபா 3,191,598 மீதியொன்று செலவிடப்படாது காணப்படுகையில் ஆண்டின் போது ரூபா 400,000 ஏற்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்து. இருப்பினும் செலவிடப்பட்ட தொகை ரூபா 890,592 ஆனமையால் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 2,701,006 அதாவது ஏற்பாட்டில் 75% சேமிப்பாகியிருந்தது.

### 2.2.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

------------------------------

மீளாய்வாண்டின் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவினங்களுக்கிடையில் குறிப்பிடத்தக்களவு முரண்கள் காணப்பட்டமையால் பாதீட்டினை பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்களின் பால் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) நூலக நிர்வாகம்

(ஆ) செயற்திட்டங்கள்

(இ) பதவியணி

(ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு